24th January 1970]

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே அந்தக் கல்லூரி நிர்வாகிகள் 'Home' யூனிவர்சிடியாக ஆக்க வேண்டுமென்று விருப்பத்தைத் தெரிவித்து வருகிறார்கள். யு. ஜி. சி. அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்ட கல்லூரியாகத்தான் இருந்து வருகிறது. இங்கே இருக்கிற பல்கலைக் கழகமும் இசைவு தரவில்லை. யு. ஜி.சி. ஒப்புதல் தரவில்லை. அதற்கு ரூ. 40 ஆயிரம் மானியம் தரும் அளவில்தான் இருந்து வருகிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, மாநில அரசு ரூ.40 ஆயிரம் மானியம் தருகிறது. அங்கே போஸ்ட்-கிராஜுவேட் தேர்வு செய்யும்போது மாநில அரசு பிரதிநிதி யாராவது தேர்வு செய்யும் குழுவில் கலந்துகொள்கிறார்களா ? எந்த முறையில் தேர்வு நடக்கிறது? அந்தக் குழு அவர்கள் பொறுப்பிலேயே விடப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அதற்காகும் செலவு முழுவதையும் அவர்களே தான் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நான் சொன்னபடி கிட்டதட்ட 23 எம்.டி., எம்.எஸ்ஸி. பிரிவுகள் வைத்திருக்கிறார்கள். செலவும் ஏராளமாக ஆகிறது. ரூ. 40 ஆயிரம் ஏதோ ஒரு வகையில் மானியமாகத் தருகிறார்கள். தேர்ந்தெடுக்கும் முறையில் அவர்கள் பரிட்சை வைத்து, அகில இந்திய முறையில் மெரிட் அடிப்படையில் வைத்துத் தேர்ந்தெடுக்கிறார்கள். நம்முடைய பிரதிநிதிகள் யாரும் இல்லை.

THIRU D. SANTOSHAM : May I inform the Hon. Minister that this Rs. 40,000 represents merely a fraction of the total expenditure incurred on that college ? Has there been any request for increasing this grant in any form from this college at any time ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு எதுவும் இல்லை. தனிக் கேள்வி போட்டால், தகவல் சேகரித்துத் தரப்படும்.

Tamil Encyclopaedia

***46. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state —**

(a) whether any financial aid was given by the Government of Tamil Nadu for the compilation of Tamil Encyclopædia after 1967 ; and

(b) if so, the amount so given ?

தமிழ்க் கலைக் களஞ்சியம்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) 1967-ம் ஆண்டிற்குப் பின்னர் தமிழ்க் கலைக் களஞ்சியம் வெளியிடுவதற்கு தமிழ்நாடு அரசினால் நிதி உதவி ஏதும் வழங்கப்பட்டதா ?

(இ) ஆமெனில் அவ்வாறு வழங்கப்பட்ட தொகை யாது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) தமிழ்க் கலைக் களஞ்சியம் வெளியிடும் பணி 1963-ஆம் ஆண்டிலேயே முடிவு பெற்றுவிட்டது. 1967-ஆம் ஆண்டிற்குப் பின் தமிழ்க் கலைக் களஞ்சியம் முதல் அனுபந்தம் வெளியிடுவதற்காக இவ்வரசு நிதியுதவியளித்துள்ளது.

(இ) இந்த முதல் அனுபந்தம் வெளியிட நிதியுதவி அளித்த தொகை ரூ. 46,500.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : தமிழ் என்சைக்ளோபீடியாவின் சில வால்யூம்கள் கிடைப்பதில்லை. அதனால் பல பள்ளிகளில் சில வால்யூம் களைத்தான் வாங்கி வைக்கவேண்டிய நிலையிருக்கிறது. ஆகவே அரசாங்கம் மீண்டும் ஒரு எடிஷன் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்தால், பல பள்ளிகள் அதைப் பயன்படுத்த முடியும். அத்தோடு குழந்தை களுக்கான கலைக் களஞ்சியம் ஒன்று தயாராகி வருகிறது. அதற்கும் அரசாங்கம் ஏதாவது உதவி அளிக்கிறதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : கலைக் களஞ்சியம் எந்த அளவிற்குத் தேவைப்படுகிறது என்ற விவரக் குறிப்பு அரசுக்கு அனுப்பப்படவில்லை. முதல் தொகுதி தீர்ந்துவிட்டது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. மீண்டும் அதைப் பதிப்பிப்பதற்கு அதை வெளியிடு கிறவர்கள் முயன்று கொண்டிருக்கிறார்கள். சிறுவர்க்கான கலைக் களஞ் சியத்திற்கு 1967-ல் இரண்டு லட்சம் ஒதுக்க ஒப்புக்கொள்ளப்பட்டபடி, இதுவரையில் 1 லட்சத்து பத்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. இது வரையில் ஒரு தொகுதி வெளிவந்திருக்கிறது. அண்மையில் 2, 3 தொகுதிகள் வெளியிடப்படும் என்ற செய்தி தெரிவிக்கப்பட்டது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : கலைக் களஞ்சியம் முதல் பதிப்பு செலவாகிவிட்டது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மற்றப் பதிப்புகள் இன்னும் விற்கப்படாமல் இருந்தால், அவற்றைச் சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் குறைந்த விலையில் கொடுக்கும் உத்தேசம் அரசாங் கத்திற்கு உண்டா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப் பினர் திரு. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் தெரிவித்ததிலிருந்து அவற்றிற்குக் கிராக்கி இருப்பது தெரிகிறது. மிச்சப்படும் சூழ்நிலை வராது. கலைக் களஞ்சியம் அடக்க விலைக்கே விற்கப்படுகிறது. மத்திய அரசு கலைக் களஞ்சியம் முதல் அனுபந்தமாக வெளியிட்டிருக்கிறது. தமிழக அரசு ரூ. 46,500 கொடுத்ததைப் போல, மத்திய அரசு ரூ. 46,500 தந்திருக்கிறது. முதல் அனுபந்தம் சேர்க்கப்பட்டபோது, புதிதாக வந்த தைச் சேர்த்து அனுபந்தமாக வெளியிடப்படுகிறது. அவை விற்றதற்குப் பிறகு ரூ. 3 லட்சத்தைத் திருப்பி மத்திய அரசு மானியத்திற்கு ஈடாகத் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 16 லட்சம் திட்டத்தில் இது நடைபெறுகிறது. ரூ. 5,50,000 அளவுக்கு அல்லது செலவில் பாதித் தொகைக்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள மத்திய அரசு முன்வந்திருக்கிறது. விற்பனைக்குப் பிறகு ரூ. 3 லட்சத் திற்கு மேற்படாமல் திருப்பித் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அடக்க விலையில் விற்பதால், யாருக்கும் தனிச் சலுகை கொடுப்பதற் கில்லை. அதற்குக் கமிஷன் உண்டு. அந்த அளவுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா என்ற ஆங்கில நாட்டு கலைக் களஞ்சியத்தை ஒருவர் வாங்கியபிறகு, தொடர்ந்து அதனுடைய இணைப்புப் பகுதி அனுபந்தங்கள் அவர்களுக்குப் போய்க் கொண்டேயிருக்கின்றன. அதேபோல நம் கலைக்களஞ்சியத்தை வாங்கிய பின் இணைப்புப் பகுதிகள் தொடர்ந்து வாங்கியவர்களுக்கு அனுப்பப் படுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப் பினர் கருத்து ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. அறிவழகன் : தமிழ் கலைக் களஞ்சியத்தில் ஆங்கில நாட்டு மேதைகளான ஷேக்ஸ்பியர், மில்டன் போன்றவர்களைப் பற்றிய விவரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போல ஆங்கிலத்தில் வரும் என்சைக் ளோபீடியா பிரிட்டாணிகாவில் தமிழ்நாட்டு அறிஞர்களான திருவள்ளுவரைப்

பற்றியோ தமிழ் நாட்டு வரலாறு பற்றியோ குறிப்பு எதுவும் இல்லை. அப்படிப்பட்ட குறிப்புகள் அதில் வர வேண்டுமென்று தமிழக அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அவர்களுடைய கலைக் களஞ்சியத்தைப் பார்த்துத்தான் நாம் கலைக் களஞ்சியம் வெளியிடும் நிலைமையில் இருக்கிறோம். உலகைப் பொருத்த பல பொதுக் கருத்துக் களை, பொது அறிவு பயக்கும் கருத்துக்களைத் தொகுத்துக் கொடுக்கும் அளவிற்கு என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா விளங்குகிறது. அதி லிருந்து எடுத்துப் போட்டிருக்கிறோம். வேண்டுமென்றால், என்சைக்ளோ பீடியா சொசைடிக்கு திருவள்ளுவரைப் பற்றியும் தமிழ் நாட்டைப் பற்றியும் எழுதி, அவற்றைச் சேர்த்துக்கொள்ளச் சொல்லலாம். அந்த முயற்சியில் அரசுதான் ஈடுபடவேண்டுமென்பதில்லை. உறுப்பினர் போன்றவர்களும் ஈடுபடலாம்.

திருமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி : என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா வில் இருந்துதான் எடுத்துப் போடவேண்டுமென்று சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது. அதில் வருகின்ற அபத்தங்களைப் பற்றி சில விஷயங்கள் உண்மைக்குப் புறம்பானவைகளாக இருப்பது பற்றி அனேகர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு ஒரு "The Myth of the Encycloaedic Brittanica" என்ற புத்தகமே வந்திருக்கிறது. அதனால் இனிமேல் நம் கலைக் களஞ்சியத்திற்கு வேண்டிய விஷயங்களை வேறு மூலங்களிலிருந்து, ஆதாரங்களிலிருந்து சரிபார்த்து வெளியிட இந்த சர்க்கார் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அவ்வாறு இல்லை. என்சைக்ளோபீடியாவைப் பார்த்தும் இங்கே இருக்கிற கருத்துக்களைத் திரட்டியும்தான் ஓரளவுக்குத் தருகிறார்கள். பல விஷயங்கள் அதைப் பார்த்துத்தான் எடுக்கவேண்டியிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த வரலாறுகளை, அகநானூறு, புறநானூறு போன்ற வற்றிலிருந்து நாமேதான் திரட்டிச் சொல்லவேண்டியிருக்கிறது. அரசினர் வரலாறு, நாகரிகவரலாறு பற்றி தமிழகத்தைப் பொறுத்தவரையில், இங்கேயே அக்கருத்துகள் திரட்டப்படுகின்றன. மற்றபடி நம் நாட்டு மக்களுக்குப் பொது அறிவைக் கொடுப்பதற்கு எதையெதைத் தொகுக்கலாமோ அவற்றை எடுத்துத் தயாரித்திருக்கிறார்கள்.

Misappropriation by Family Planning Doctors in Madurai district.

*47. Q.—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :—

(a) whether it is a fact that a huge amount of Government funds was misappropriated by Family Planning Doctors in Madurai district ;

(b) whether the Directorate of Vigilance and Anti-Corruption has registered a case in this regard ; and

(c) if so, the action taken thereon ?

மதுரை மாவட்ட குடும்ப நலத்திட்ட மருத்துவர்களால் செய்யப்பட்ட கையாடல்கள்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) மதுரை மாவட்டத்திலுள்ள குடும்ப நலத்திட்ட மருத்துவர்கள், அரசு நிதியைப் பெரிய அளவில் கையாடல் செய்துள்ளனர் என்பது உண்மையா ?